1967 ஜூலை 10]

Rice mills

* 233 Q.—THIRU M. WILLIAM: Will he Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether there is any proposal to permit the land owners owning ten acres and above to own hulling rice mills of their own; and

(b) if so, whether any licence should be taken for the same.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU M. WILLIAM: Sir, may I know whether the Government will come forward to open one or two hulling rice mills in each revenue village?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இந்த ரைஸ் மில்களுடைய பர்மிட், லைசென்ஸ் என்பதுபற்றி சில விதிமுறைகள் இருக்கின்றன. எங்கெங்கு எவ்வளவு நெல் உற்பத்தியாகிறது, எந்த ஊரிலே ரைஸ் மில்கள் இல்லை என்ற இந்த அடிப்படை விதி முறைகளின்கீழ், இதற்கான சட்டத்தின்கீழ் இந்த அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: ஆந்திராவில் நெல் உற்பத்தி செய்பவர்களே 'ஹல்லிங்' செய்கிறார்கள், ஓனர்ஸ் ரைஸ் மில்ஸ் என்று. ஐந்து ஏக்கர் இருந்தாலும்கூட சொந்த ரைஸ் மில் வைக்கலாம். ஆந்திரா திட்டத்தை நாமும் அமுல் நடத்த வழி வகுக்கலாமா? அதற்காக இரண்டு, மூன்று ஜில்லாக்களில் 'பைலட் ஸ்கீம்' முதலில் ஆரம்பித்து வைக்க அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அந்த ஆந்திரா முறையை பின்பற்றும் உத்தேசம் இந்த அரசாங்கத்துக்கு இல்லை. அதற்கு மாறாக வேறு சில திட்டங்களை வைத்திருக்கிறோம்.

திரு. சொ. கோவிந்தராசன்: ரைஸ் மில்லிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு தடவை கணக்கு அனுப்புமாறும், கண்டுமுதல் அரிசி, தவிடு, உமி என்று பிரித்து அனுப்புமாறும் கேட்கப்படுகிறது. ஆனால் அந்தக் கணக்கை எடுத்துக் கொள்வது இல்லை. ஏதோ ஒரு கடனுக்காக அனுப்பப்படுகிறதே தவிர அது மேற்கொள்ளப் படுவது இல்லை. அவ்வாறு அந்தக் கணக்கு அனுப்புவது நிறுத்தப் படுமா? அல்லது தொடர்ந்து அதை கொடுத்துக்கொண்டு வரவேண்டுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை இப்படி அரிசி ஆலைகள் அனுப்பும் கணக்கு விவரங்களை கண்காணிக்கும் முறைகள் செம்மைப்படுத்தப்பட்டிருக்கின்றன. 'என்ஃபோர்ஸ்மெண்ட் ஸெல்' உணவுத் துறையில் இப்போது புதிதாக வந்திருக்கிற அதிகாரியின்கீழ் இவைகளை நல்ல வகைகளில் கண்காணிக்கலாம், மேலும் அவைகளைச் சீராக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, கொள்முதல் முயற்சி கருதியும், அதே சமயத்தில் அரிசி மில்களிலிருந்து வெளி வரும்போது மிகவும் மோசமாக இருக்கிறது என்று புகார்கள் ஏராளமாக வருவது கருதியும் அரிசி மில்களைக் கட்டாயக் குத்தகைக்கு எடுத்து நடத்தவோ அல்லது நாட்டுடைமையாகவோ எடுத்துக்கொண்டு நடத்துவதற்கு ஏதாவது ஆலோசனை ஆட்சி யாளரிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் சொல் லுகிற மேலோட்டமான கருத்தின் அடிப்படையில் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சில மாடல் மில்கள், சில ரைஸ் மில்கள் இப்பொழுது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் கொள்கை என்ன வென்றால், மத்திய சர்க்காரோடு இப்பொழுது கலந்து ஆலோசிக் கப்பட்டிருக்கிறது. திட்டவட்டமான எந்த முடிவுக்கும் வரா விட்டாலும், நல்ல முறையில் 'குவாலிட்டி' இருக்கவேண்டும், நல்ல கண்காணிப்பு இருக்கவேண்டும் என்பதற்காக இன்னும் உயர்தர அதிகாரிகளை, தனிப்பயிற்சி பெற்றவர்களைக்கொண்டு இந்தத் துறை நன்கு செயல்பட்டு ஒரு செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமை சரியாகாவிட்டால் சர்க்காரே கொள்முதலையும், மற்றவைகளையும் எடுத்து நடத்த இந்த அரசாங்கம் பரிசீலிக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, are there any rigid rules which require that only people who have got lands can own rice hulling mills or others also can have them?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : There are no rules as such but permits and licences are granted under the Rice Milling Industries Regulation Act, by the State Government.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, தமிழகத்தில் ஓடக் கூடிய ரைஸ்மில்கள் நல்ல முறையில் ஓடுவதற்கு, அங்கு பக்கத் திலேயிருக்கும் இன்னொரு முதலாளி ரைஸ் மில்லைக் கட்டி லைசென்ஸுக்காக மனு அப்ளை செய்திருக்கிறார். அப்படி அவர் களுக்கு லைசென்ஸை வழங்குவது பக்கத்தில் ஓடக்கூடிய ரைஸ் மில்லின் வருவாயைப் பாதிக்கும் என்பதால், லைசென்ஸ் வழங்கப் படுமா? அல்லது நிறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உறுப்பினரவர்கள் எந்த ஊரைக் குறித்துச் சொல்கிறார் என்று தெரியவில்லை. இந்தக் கேள்வியில் இது எழவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, what is the policy of this Government regarding the grant of rice mill licences in future. Since there is an incessant and constant rumour prevailing among the people that the State Government are going to nationalize

the rice mill industry, I want the Hon. Minister to make a clear-cut statement in regard to this matter and allay the fears entertained by the rice-mill owners?

THE HON. THIRU C. N. ANNADURAI: Sir, I am surprised that the hon. Member belonging to the Party which has passed a resolution in Bhubaneshwar on those lines, is having apprehensions about it.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 234-வது வினா 12—7—1967 வரையில் தள்ளிப்போடப்படுகிறது.

விசைப் படகுகள்

*235 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மீன் பிடிப்பதற்கு உபயோகப்படும் மோட்டார் படகுகள் தற்போது எத்தனை உள்ளன?

(இ) இதனை மேலும் அதிகப்படுத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) தற்போது 370 விசைப் படகுகள் மீன்பிடிப்பதில் ஈடுபட்டுள்ளன.

(இ) உண்டு.

திரு. என். சங்கரய்யா: சாதாரண படகுகளுக்குப் பதிலாக இந்த மின்விசைப் படகுகள் கொடுக்கப்படுவதினால் மீனவர்களுக்கு கிடைக்கக்கூடிய வருமானம் எந்த அளவு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: சாதாரண படகிலே போகிறவர்கள் குறைந்த அளவுதான் மீன் பிடிக்க முடியும். விசைப் படகிலே போகிறவர்கள் நிறைய மீன் பிடிக்கக்கூடிய நிலையில் அதிக வருமானத்தைப் பெறுவதற்கு வழி இருக்கிறது.

திரு. எஸ். ராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தப் படகுகளைச் சரியான முறையில் ஓட்டுவதற்கு மீனவர்களுக்கு ஒரு பயிற்சி தரப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இப்பொழுது பயிற்சி அளிக்கப்பட்டுத்தான் வருகிறது.

திரு. ப. மகாதேவன்: படகுகள் கொடுப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருப்பதாகவும், அந்த உத்தரவைத் தளர்த்தியிருப்பதாகவும் அறிகிறேன். நல்ல மீன் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கும் நேரத்தில், உடனடியாக அந்தப் படகுகளைக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: ஏற்கனவே வழங்கப்பட உத்தரவிடப்பட்ட படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது உண்மைதான். அது பரிசீலனையில் இருக்கிறது. அது சம்பந்த